RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-91 | 08 ஏப்ரல் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## பிரதமர் மோடி வருகைக்கு பிறகு கடலுக்குச் சென்ற ராமநாதபுரம் மீனவர்கள்



ராமேசுவரம், ஏப்.8

பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை முன்னிட்டு, தொடர்ந்து 5 நாட்கள் கடலுக்குச் செல்லாமல் இருந்த மீனவர்கள் இன்று (திங்கட்கிழமை) கடலுக்குச் சென்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி பாம்பன் பாலம் திறப்பு விழாவிற்காக ஞாயிற்றுக்கிழமை ராமேசுவரம் வந்தார். பாதுகாப்பு காரணங்களுக்காக ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் கடந்த 5 நாட்களாக கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை.

பாம்பன் மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடற்பகுதியில் நிறுத்தப்பட்டிருநத படகுகள் குந்துக்கால் மற்றும் தங்கச்சிமடம் மீன்பிடி துறைமுகப் பகுதிகளுக்கு கொண்டுச் செல்லப்பட்டது.

மேலும், கடலுக்கு செல்வதற்கான அனுமதி டோக்கனும் மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்நிலையில் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று திங்கட்கிழமை கடலுக்குச் சென்றனர். பாம்பன் மற்றும் மண்டபம் விசைப்படகு மீனவர்கள் நாளை கடலுக்குச் செல்கின்றனர்.

## "நான் உயிருடன் இருக்கும் வரை யாரும் வேலை இழக்க மாட்டார்கள்" மம்தா பானர்ஜி உறுதி



கொல்கத்தா, ஏப்.8

உச்ச நீதிமன்ற உத்தரவால் நியமனம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர்களின் வேலை பாதுகாக்கப்படும் என்றும் தான் உயிருடன் இருக்கும் வரை யாரும் வேலையை இழக்க மாட்டார்கள் என்றும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி உறுதி அளித்துள்ளார்.

மேற்குவங்கத்தில் கடந்த 2016ம் ஆண்டு பணியமர்த்தப்பட்ட 25,753 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் நியமனம் செல்லாது என கொல்கத்தா உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் கடந்த 3ம் தேதி உறுதி செய்தது.

இந்நிலையில், வேலை இழந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களைச் சந்தித்து மம்தா பானர்ஜி பேசினார். அப்போது அவர், "உச்ச நீதிமன்ற உத்தரவால் நியமனம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர்களின் வேலை பாதுகாக்கப்படும். நான் உயிருடன் இருக்கும் வரை யாரும் வேலையை இழக்க மாட்டார்கள்.

யார் தகுதியானவர், யார் தகுதியற்றவர் என்பதை உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்த வேண்டும். கல்வி முறையை சீர்குலைக்க யாருக்கும் உரிமை இல்லை. பாஜக ஆளும் மத்தியப் பிரதேசத்தில் வியாபம் வழக்கில், பலர் கொல்லப்பட்டனர். அவர்களுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. நீட் தேர்வில், பல குற்றச்சாட்டுகள் எழுந்தன. உச்ச நீதிமன்றம் தேர்வை ரத்து செய்யவில்லை.

உச்ச நீதிமன்றம் எங்களுக்கு தெளிவுபடுத்தினால், நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போம். இல்லையென்றால், நாங்கள் ஒரு வழியைக் கண்டுபிடித்து உங்களுக்கு (நியமனம் ரத்து செய்யப்பட்ட ஊழியர்கள்) ஆதரவாக நிற்போம். இரண்டு மாதங்கள் கஷ்டப்படுங்கள். 20 ஆண்டுகள் நீங்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. அந்த இரண்டு மாதங்களுக்கும் நான் இழப்பீடு வழங்குவேன். நீங்கள் பிச்சை எடுக்க வேண்டியதில்லை.

கல்வி முறையை அழிக்க ஒரு சதி நடக்கிறது. உயர் கல்விக்கான நுழைவாயில்களாக இருப்பவர்கள் 9, 10, 11, 12 ஆம் வகுப்புகளின் ஆசிரியர்கள். நியமனம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர்களில் பலர் தங்கப் பதக்கம் வென்றவர்கள், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறந்த முடிவுகளை அடைந்துள்ளனர், நீங்கள் அவர்களை திருடர்கள் என்று அழைக்கிறீர்கள். நீங்கள் அவர்களை திறமையற்றவர்கள் என்று அழைக்கிறீர்கள், உங்களுக்கு இந்த உரிமையை யார் கொடுத்தார்கள்? இந்த விளையாட்டை விளையாடுவது யார்?

தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டதாக தயவுசெய்து கருத வேண்டாம். நாங்கள் கல் நெஞ்சம் கொண்டவர்கள் அல்ல. இதைச் சொன்னதற்காக நான் சிறையில் அடைக்கப்படலாம். ஆனால் எனக்கு அது குறித்து கவலையில்லை. வேலை இழந்தவர்களுக்கு நான் துணை நிற்கிறேன், அவர்களின் கண்ணியத்தை மீட்டெடுக்க எல்லாவற்றையும் செய்வேன்.

தகுதியானவர்கள் வேலைகளை இழக்க நான் அனுமதிக்க மாட்டேன். அதோடு, உங்கள் சேவை இடைவெளி இன்றி தொடர்வதை உறுதி செய்ய எங்களிடம் தனித்தனி திட்டங்கள் உள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் நலத்திட்ட உதவி



சிவகங்கை ஏப்8

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 384 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், 09 பயனாளிகளுக்கு ரூ.90,000/ மதிப்பீட்டிலான மருத்துவ உதவித் தொகைக்கான காசோலைகளையும், 72 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.6,45,000/ மதிப்பீட்டிலான சிறுதொழில் கடனுதவிக்கான காசோலைகளையும், 67 பயனாளிகளுக்கு தலா ரூ.12,000/ வீதம் மொத்தம் ரூ.8,04,000/ மதிப்பீட்டிலான சிறுவியாபார கடனுதவிக்கான காசோலைகளையும், 41 பயனாளிகளுக்கு தலா ரூ.10,000/ வீதம் மொத்தம் ரூ.4,10,000/ மதிப்பீட்டிலான கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளையும் என மொத்தம் 189 முஸ்லீம் மகளிர் உதவும் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.19,49,000/ இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் மற்றும் கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், 06 பயனாளிகளுக்கு தலா ரூ.15,000/ வீதம் கோழி வளர்ப்பு உதவித்தொகைக்கான காசோலைகளையும், 54 பயனாளிகளுக்கு தலா ரூ.15,000/ வீதம் ஆடு வளர்ப்பு உதவித்தொகைக்கான காசோலைகளையும், 17 பயனாளிகளுக்கு தலா ரூ.15,000/ வீதம் மாடு வளர்ப்பு உதவித்தொகைக்கான காசோலைகளையும், 01 பயனாளிக்கு தலா ரூ.15,000/ மதிப்பீட்டில் சிறுதொழில் தொடங்குவதற்கான உதவித்தொகைக்கான காசோலையினையும் என மொத்தம் 78 கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.11,70,000/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் என ஆக மொத்தம் 267 பயனாளிகளுக்கு ரூ.31,19,000/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜெயமணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) கார்த்திகேயன் உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தங்கச்சிமடம் பகுதியில் ரூ.150 கோடியில் மீன்பிடித் துறைமுகம் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, ஏப்.8

"மன்னார் வளைகுடா பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக தெற்கு பகுதியில் இந்தியப் பெருங்கடல் நோக்கிச் செல்வதற்கு வழிவகை செய்யும்பொருட்டு, தங்கச்சிமடம் பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் துவங்கும்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு மீனவர் நலன் தொடர்பாக, சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விதி 110ன்கீழ் அறிவித்து பேசியதாவது: "தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்க, கடந்த ஏப்.2ம் தேதி அன்று தமிழக சட்டமன்றத்தில் மீனவர்கள் பிரச்சினை குறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். அப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கச்சத்தீவை மீட்க வேண்டும், இலங்கை சிறையில் வாடும் மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும், இலங்கைக் கடற்படை கைப்பற்றியுள்ள படகுகளைத் திருப்பித் தரவேண்டும் என்றும் அதில் வலியுறுத்தியிருந்தோம். இலங்கை சென்றிருந்த பிரதமர் இதுகுறித்து இலங்கை அரசுடன் பேசி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதிலே குறிப்பிட்டிருந்தோம். அந்தத் தீர்மானத்தை பிரதமருக்கு உடனடியாக அனுப்பியும் வைத்திருந்தோம்.

இந்த நிலையில், பிரதமர் இலங்கை சென்றிருந்தார். அப்போது மீனவர் விடுதலை மற்றும் கச்சத்தீவு குறித்து பெரிய அளவிலான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும், சிறையில் வாடும் 97 மீனவர்களும், சிறைபிடிக்கப்பட்ட படகுகளும் மீட்கப்பட்டு தாயகம் திரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாதது நமக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் அடிக்கடி அதிக எண்ணிக்கையில் கைதுசெய்யப் படுவது கடந்த சில மாதங்களாக நம் அனைவரையும் கவலைக்கு உள்ளாக்கி வரக்கூடிய செய்தியாகும். மத்திய அரசும், இந்தியப் பிரதமரும் நமது கோரிக்கைகளைப் புறக்கணிக்கின்றார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. மத்திய அரசு எப்படி நடந்து கொண்டாலும், நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நாம் தவறமாட்டோம்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழக அரசு சில முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது.

› மன்னார் வளைகுடா பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக தெற்கு பகுதியில் இந்தியப் பெருங்கடல் நோக்கிச் செல்வதற்கு வழிவகை செய்யும்பொருட்டு, தங்கச்சிமடம் பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் துவங்கும்.

› 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாம்பன் பகுதியிலும் மற்றும் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் குந்துக்கல் பகுதியிலும் மீன்பிடித் துறைமுகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே நான் அறிவித்துள்ளேன்.

இவற்றைத் தவிர, மன்னார் வளைகுடா பகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்த சில புதிய வாழ்வாதாரத் திட்டங்களையும் செயல்படுத்திட பின்வரும் சிறப்புத் திட்டங்களை அறிவிக்கின்றேன்:

› கடற்பாசி வளர்ப்பு, பதப்படுத்துதல், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், விற்பனை தொடர்புடைய தொழில்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியுடன் தேவையான உபகரணங்கள் அளித்து தொழிலில் ஈடுபட சுமார் 7000 பயனாளிகளுக்கு 52 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

› கூண்டு முறையில் மீன் மற்றும் சேற்று நண்டு வளர்ப்பு, பதப்படுத்துதல், விற்பனை தொடர்புடைய தொழில்களை மீனவ சமுதாய மக்கள் மேற்கொள்ள 25 கோடியே 82 லட்சம் ரூபாய் செலவில் உபகரணங்கள் வழங்கி, தொடர்பணிகளும் மேற்கொள்ளப்படும்.

› மீன் பதப்படுத்துதல், மீன் உலர்த்தும் தொழில்நுட்பங்கள், தொழில்நுட்ப உபகரணங்களை அளித்தல் மற்றும் பயிற்சிகள் வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் சுமார் 2,500 மீனவக் குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகளுக்கு 9 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

› சுமார் 15 ஆயிரத்து 300 மீனவர்களுக்கு, மீன் மற்றும் மீன் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயார் செய்வதற்கான தொழில்நுட்ப பயிற்சி வழங்கிட 20 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்து மேம்படுத்தும் பொருட்டு, இந்திய பெருங்கடலில் ஆழ்கடல் மீன்பிடிப்பு செய்வதற்கு ஏதுவாக, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் 360 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 216 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவிடப்படும்.

மொத்தம் 576 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களால் மன்னார் வளைகுடா பகுதியைச் சார்ந்த மாவட்டங்களின் மீனவர்கள் பெரிதும் பயனடைவார்கள், அவர்களுடைய வாழ்வாதாமும் மேம்படும்.

அதுமட்டுமல்ல, நமது மீனவ சகோதரர்களின் குடும்பத்தினர் கூடுதல் வாய்ப்புகள் பெற்று, அதிகமான பொருளீட்ட வழிவகை ஏற்படுத்தப்படும். என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## 3 கவுன்சிலர்கள், உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் பதவி நீக்க வழக்கு அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஏப்.8

தங்களது பதவி நீக்கத்தை எதிர்த்து சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் மற்றும் உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் தொடர்ந்த வழக்கில், தமிழக அரசு பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி 189வது வார்டு கவுன்சிலர் பாபு, 5வது வார்டு கவுன்சிலர் கே.பி.சொக்கலிங்கம், தாம்பரம் மாநகராட்சி 40வது வார்டு கவுன்சிலரும், மண்டலத் தலைவருமான ஜெயபிரதீப் மற்றும் உசிலம்பட்டி நகராட்சித் தலைவரும், 11வது வார்டு கவுன்சிலருமான சகுந்தலா ஆகியோர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக்கூறி பதவி நீக்கம் செய்து நகராட்சி நிர்வாகத்துறை செயலர் கடந்த மார்ச் 27ல் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து தாம்பரம் மாநகராட்சி மண்டலத் தலைவரான ஜெயபிரதீப் ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் பாபு, கே.பி.சொக்கலிங்கம் மற்றும் உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் சகுந்தலா ஆகியோரும் தங்களது பதவி நீக்கத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகள் நீதிபதி ஜெ. சத்யநாராயண பிரசாத் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் தரப்பில், "முழுமையான விசாரணை நடத்தாமல் தங்களை பதவி நீக்கம் செய்து பிறப்பித்துள்ள உத்தரவு சட்டவிரோதமானது. அரசு அனுப்பிய நோட்டீசுக்கு அளித்த பதிலில் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ள கருத்துருக்கள் எங்களுக்கு வழங்கப்படவில்லை," என வாதிடப்பட்டது

இதேபோல உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் தரப்பில், "நகராட்சி தலைவர் பதவியில் இருந்தும், கவுன்சிலர் பதவியில் இருந்தும் தன்னை நீக்கியுள்ளனர். முதலில், நகராட்சி தலைவர் பதவியில் இருந்து நீக்கம் செய்வது தொடர்பாக குறிப்பிட்ட அரசு, அந்த உத்தரவில் கவுன்சிலர் பதவியையும் சேர்த்துள்ளதாக" வாதிடப்பட்டது.

இதில் நிறைய முரண்பாடுகள் உள்ளதாக நீதிபதி தெரிவித்ததும், இந்த மனு தொடர்பாக வரும் ஏப்.21ம் தேதிக்குள் விரிவான பதில் அளிக்கப்படும் என தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வழக்கு விசாரணையை வரும் ஏப்.21ம் தேதிக்கு நீதிபதி தள்ளிவைத்துள்ளார்.

## இங்கிலாந்து, ஆஸ்திரியா நாடுகளுக்கு நிர்மலா சீதாராமன் பயணம்

புதுடெல்லி, ஏப்.8

மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தியா இங்கிலாந்து நாடுகளிடையேயான பொருளாதாரம், நிதி தொடர்பான அமைச்சர்கள் நிலையிலான 13வது ஆலோசனைக் கூட்டத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்கிறார். இங்கிலாந்து, ஆஸ்திரியா நாடுகளைச் சேர்ந்த சிந்தனையாளர்கள், முதலீட்டாளர்கள், வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஏப்ரல் 8ம் தேதி முதல் 13ம் தேதி வரை இவ்விரு நாடுகளிலும் அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார்.

இந்தியா இங்கிலாந்து நாடுகளிடையேயான பொருளாதாரம், நிதி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஏப்ரல் 9ம் தேதி லண்டனில் நடைபெற உள்ளது. இவ்விரு நாடுகளின் நிதியமைச்சர்கள் தலைமையில் இந்த 13வது சுற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த இரு நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நிலையிலான கூட்டங்களில் பணிக்குழுக்கள், முதலீடுகள், நிதிசார் சேவைகள், நிதி நடவடிக்கைகளுக்கான விதிமுறைகள் ஒருங்கிணைந்த பண பரிவர்த்தனை செயலிவாயிலாக மேற்கொள்ளப்படும் நிதிசார் பரிவர்த்தனைகள், வரிவிதிப்பு, சட்ட விரோத பண பரிவர்த்தனைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

தனது இங்கிலாந்து பயணத்தின் போது ஓய்வூதிய நிதிகள், காப்பீட்டு நிறுவனங்கள், வங்கிகள், நிதிச் சேவை நிறுவனங்கள் உள்ளிட்ட அம்சங்கள் குறித்தும் சர்வதேச அமைப்புகளின் தலைமை நிர்வாக அதிகாரிகள் முன்னிலையில் நடைபெறும் இந்தியா இங்கிலாந்து முதலீட்டாளர் வட்டமேஜை மாநாட்டிலும் நிதியமைச்சர் உரையாற்றுகிறார்.

தனது பயணத்தின் 2வது கட்டமாக ஆஸ்திரியா செல்லும் நிதியமைச்சர், அந்நாட்டு நிதியமைச்சர் மார்கஸ் மார்டர்பவர் உட்பட மூத்த தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.




கன்னியாகுமரி மாவட்டம் கடையல் வருவாய் கிராமத்திற்கு உட்பட கிராமங்களில் தோட்ட முதலாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டு உள்ளது ஆனால் விவசாயம் செய்து வாழ்ந்து வரும் 300 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 100 ஆண்டுகளாக பட்டா வழங்க வில்லை பட்டா கேட்டு கிராம மக்கள் நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்திற்கு திரண்டு வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தனியார் திருமண மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை அஇஅதிமுக தேனி மேற்கு மாவட்டம் போடி சட்டமன்றத் தொகுதி போடி தெற்கு நகர் கழகத்தின் சார்பாக பூத்கமிட்டி (பாகம்) நிர்வாகிகள் தேர்வு செய்தல் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. போடி தெற்கு நகர கழகச் செயலாளர் .மாரியப்பன் தலைமையிலும், .ஜக்கையன் தேனி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், பாப்புலர் . முத்தையா தேனி மேற்கு மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் ஆகியோர்களின் ஆலோசனை படியும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அஇஅதிமுக கட்சி நிர்வாகிகளும் உறுப்பினரும் கழகத் தொண்டர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## சின்னமனூரில் நடைபெற்ற தேமுதிக தேனி தெற்கு மாவட்ட பொறுப்பாளருக்கு வரவேற்பு



தேனி.ஏப்.8

தேனி தெற்கு மாவட்ட செயலாளராக செல்லத்துரை பொறுப்பேற்றவை தொடர்ந்து, சின்னமுருக்கு வருகை புரிந்து அங்கு ரவுண்டானா அருகில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்சிலைக்கும் மற்றும் சினனூர் அரசு மருத்துவமனை அருகில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார் இதனைத் தொடர்ந்து சின்னமனூரில் உள்ள வ .உ. சிதம் பரனார், காமராஜர், மகாத்மா காந்தி ஆகியோரின் சிலைக்கு மாலை அணிவித்து தேமுதிக சார்பில் மரியாதை செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தெற்கு மாவட்ட செயலாளர் செல்லத்துரை அவர்களை சின்னமனூர் நகர செயலாளர் முருகன் தலைமையில் அவைத்தலைவர் விஜய் வீரன் முன்னிலையில் மற்றும் பொருளாளர் சுடர் கனெக்சன் தேமுதிக நிர்வாகிகள், தொண்டர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர் அதனைத் தொடர்ந்து பைபாஸில் உள்ள சந்தனம் திருக்கோயிலில் நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் சின்னமனூர் நகர செயலாளர் முருகன். மாவட்ட மகளிர் அணி செல்வி, தலைமை செயற்குழு உறுப்பினர் குடியரசன், நகர மகளிர் அணி துணைச் செயலாளர் மஞ்சுளா தேவி, முன்னாள் நகர செயலாளர் பிரபு, சின்னமனூர் ஒன்றிய செயலாளர் செல்வம், ஆண்டிபட்டி ஒன்றிய செயலாளர் ரத்தனவேல், கேப்டன் முரட்டு பக்தர் கார்த்திக் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## திருப்போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சியில் தி.மு.க சார்பில் நீர், மோர், பந்தல் திறப்பு




பொன்மார் ஏப்.8

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியம், பொன்மார் ஊராட்சியில் நீர், மோர், பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர், தா. மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் வழிகாட்டுதலின்படி, பொன்மார் ஊராட்சி மன்ற தலைவர், எஸ். நாராயணன் தலைமையில் நீர் மோர், பந்தலை திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவருமான எஸ். ஆர். எல். இதயவர்மன் ரிப்பன் வெட்டி மகிழ்ச்சியுடன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய் , பலவகையான பழங்கள் மற்றும் நீர், மோர், கலர் குளிர்பானங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமை பொது குழு உறுப்பினர், மா.கு. துணைத் தலைவர், ஜி. சி. அன்புச்செழியன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், பி. டீ. வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர், எல். சுரேஷ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கீழக்கோட்டை சுற்றுச்சூழல் மன்ற பள்ளி மாணவர்கள் சார்பில் நலவாழ்வு மையத்தில் உலக சுகாதார தினம்






காளையார் கோவில் ஏப்.8


உலக சுகாதார அமைப்பு 1950 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7ஆம் தேதி உலக சுகாதார தினமாகக் கொண்டாடி வருகிறது. 2025 ஆம் ஆண்டு "ஆரோக்கியமான தொடக்கங்கள் நம்பிக்கையான எதிர்காலங்கள்" என்ற கருப்பொருளைக் கொண்டு உலக சுகாதாரத் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இவ்விழாவை கொண்டாடும் விதமாக சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டை சுற்றுச்சூழல் மன்ற பள்ளி மாணவர்கள் அரசு துணை சுகாதார நிலையத்திலுள்ள நலவாழ்வு மையத்தில் உலக சுகாதார தினத்தை சிறப்பாக கொண்டாடினர்.

இடைநிலை சுகாதார செவிலியர்கள் சரண்யா பிரியங்கா தனலட்சுமி ஆகியோருக்கு அவர்களின் பணி சிறக்க வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது. ஆரோக்கியமான நல வாழ்வு நமது உரிமை என்பதை சட்டமாக்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக மாபெரும் கையெழுத்து வாங்கும் இயக்கம் ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 15 முடிய நடைபெற்று வருகிறது. பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை கையெழுத்து இயக்கத்தை தொடங்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியர்களும் சத்துணவு பணியாளர்கள் மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கையொப்பமிட்டனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி இந்த ஆண்டுக்கான விழிப்புணர்வு பிரச்சாரம் இறப்புகளை குறைப்பதற்கும் தாய்மார்கள் மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளின் நீண்டகால நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் நோக்கமாகக் கொண்ட தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் அரசாங்கங்களையும் சுகாதார அமைப்புகளையும் உலக சுகாதார அமைப்பு வலியுறுத்துகிறது. எனவேதான் அனைவருக்கும் மருத்துவ சேவை என்பதை வலியுறுத்தும் மக்கள் நலவாழ்வு உரிமைச் சட்டத்தை அடிப்படை சட்டமாக மாற்ற மத்திய மாநில அரசுகள் முன் வர வேண்டும். அப்போதுதான் அனைத்து மக்களுக்கும் குறைந்த செலவில் மருத்துவ சேவை கிடைக்கும். இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட சுகாதாரத் துறையில் தமிழ்நாடு சற்று உயர்ந்தே காணப்படுகிறது. கடந்த சட்டசபை தேர்தலின்போது மக்கள் நலவாழ்வு உரிமைச் சட்டத்தை நிறைவேற்றுவோம் என்று தேர்தல் வாக்குறுதியில் கூறியதுடன் அதனை நிறைவேற்றவும் அரசு ஆர்வமாக உள்ளது என்பது வரவேற்கத்தக்கது. இந்த சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சுகாதார துறையிலும் தமிழ்நாடு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அறிவியல் இயக்கம் விரும்புகிறது.

எனவே தான் அரசுடன் இணைந்து இச்சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நடத்தி வருகிறோம் என்றார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். ஆசிரியைகள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா கலந்துகொண்டார்கள்.

## வடுகபட்டியில் அஇஅதிமுக சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்





பெரியகுளம் ஏப்.8


தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டி தனியார் மண்டபத்தில் தேனி கிழக்கு மாவட்ட அஇஅதிமுக சார்பில் பூத்கமிட்டி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பெரியகுளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அன்னபிரகாஷ் தலைமை தங்கினார். பெரியகுளம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜகுரு, வடுகபட்டி பேரூர் கழக செயலாளர் பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொள்கை பரப்பு துணைச்செயலாளர் ரதிமீனா சேகர், தேனி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முறுக்கோடை இராமர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசும்போது "2026 சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு காலம் மட்டுமே உள்ளது. ஆகையால் தற்போது முதலே பூத் கமிட்டியை வலுப்படுத்தி பெரியகுளம் மற்றும் ஆண்டிபட்டி தொகுதியை மீண்டும் அஇஅதிமுக எஃகு கோட்டையாக மாற்ற வேண்டும்.


ஒவ்வொரு பூத்தில் 9 உறுப்பினர்களை நியமிக்க வேண்டும். இதில் இளைஞர்கள் மற்றும் 3 மகளிரும் அடங்கும். முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை நாளைய முதலமைச்சராக்க (2006) நமக்குள் எந்த ஒரு பாகுபாடு அல்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் " என்று பேசினர்.

இந்நிகழ்ச்சியில் கழக அம்மா பேரவை இணைச்செயலாளர் ஜெயக்குமார், முன்னாள் எம்.எல்.ஏ. பெரியவீரன், தலைமை கழக பேச்சாளர் சுந்தர பாண்டியன், மாவட்ட கழக இணைச்செயலாளர் முத்துலட்சுமி, மாவட்டத் துணைச் செயலாளர் அங்கு செல்வி சௌந்தர், பெரியகுளம் நகர செயலாளர் பழனியப்பன், துணை செயலாளர் வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, இளைஞர் மற்றும் இளம் பெண்கள் மாவட்ட செயலாளர் கழகத்தின் போர்வாள் அப்பாஸ் மைதீன், இலக்கிய அணி செயலாளர் வழக்கறிஞர் தவமணி, தாமரைகுளம் பேரூர் கழக செயலாளர் மனோகரன், மாவட்ட அம்மா பேரவை இணைச்செயலாளர் இராம தண்டபாணி, மாவட்ட மகளிரணி நிர்வாகிகள் பாப்பா இளமுருகன், பங்கஜம் , பூங்கொடி, பஞ்சவர்ணம் ஒன்றிய அவைத்தலைவர் முத்துசாமி, விவசாய அணி பிரிவு செயலாளர் ரத்தினவேல், அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் சபரி பரமன், ஒன்றிய எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளர் மணிமாறன், ஒன்றிய மாணவரணி செயலாளர் பாலசுப்பிரமணியன், பேரூர் கழக அவைத்தலைவர் பெத்தணசாமி, துணைச் செயலாளர் பாலையா, பொருளாளர் வெற்றிவேல், மாவட்ட பிரதிநிதி ராஜேந்திரன், வார்டு கழக செயலாளர்கள் சௌந்தர பாண்டியன், திரிசங்கு, பழனிவேல், முத்தி ருளன் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் புதிய உறுப்பினர்களை சேர்க்க அனைத்து கிளைக்கழக செயலாளர்களுக்கும் விண்ணப்பம் வழங்கப்பட்டது.

## பண்ருட்டி பலா, முந்திரிக்கு புவிசார் குறியீடு: விவசாயிகள் மகிழ்ச்சி









பண்ருட்டி, ஏப்..8

கடலூர் மாவட்டம், பண்ருட்டி பலாப்பழம் மற்றும் முந்திரிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளதற்கு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

புவிசார் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் இருப்பிடத்திலிருந்து உருவாகும் பொருளில் பயன்படுத்தப்படும் அடையாளமாகும்.

அப்பொருள்கள் அதன் தோற்ற இடத்தின் சிறப்பு குணங்களைக் கொண்டதாக இருக்கும்.

அந்த வகையில், பண்ருட்டி பலாப்பழம், முந்திரிக்கு புவிசார் குறியீடு கோரி சென்னையில் உள்ள புவிசார் குறியீடு பதிவகத்தில் 18.2.2022 அன்று தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் மாளிகம்பட்டு உழவர் உற்பத்தியாளர்கள் சங்கம், தமிழ்நாடு முந்திரி பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தினர் விண்ணப்பித்தனர்.

மேலும் இதுதொடர்பாக 202122ஆம் ஆண்டு தமிழக அரசின் வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, விவசாய சங்கங்களுடன் கலந்தாலோசனை செய்து, விண்ணப்பங்கள் புவிசார் குறியீடு பதிவகத்தில் பரிசீலிக்கப்பட்டு, ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று 30.11.2024 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. இதற்குப் பிறகு 4 மாத காலத்துக்குள் ஆட்சேபணை ஏதும் இல்லை எனில், புவிசார் குறியீடு வழங்கப்படும் என்ற நிலையில், பண்ருட்டி பலாப் பழம், முந்திரிக்கு புவிசார் குறியீடு மார்ச் 31 ஆம் தேதி வழங்கப்பட்டது.

புவிசார் குறியீடு பெறப்பட்ட வேளாண் பொருள்களை சந்தைப் படுத்தல் எளிதாக்கப் படுவதுடன், அவற்றின் தேவை மற்றும் ஏற்றுமதி அளவும் அதிகரிக்கும். மேலும், வேளாண் வணிகத்தை விரிவுபடுத்தி, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் வழிவகுக்கும். வேளாண் பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற வேளாண்மை உழவர் நலத் துறை சிறப்பாக பங்காற்றி வருகிறது என விவசாயிகள் மற்றும் சங்கத்தினர் தெரிவித்தனர்..



திருச்சிராப்பள்ளி சத்திரம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் 07 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பின் மகேஷ் பொய்யாமொழி இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.உடன் துணை மேயர் திவ்யா, மண்டல தலைவர் மதிவாணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் முத்துகிருஷ்ணன், போக்குவரத்து துறை அலுவலர்கள் பணியாளர்கள் மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..





கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா உலக சுகாதார தினத்தையொட்டி ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மாணவ மாணவியர்கள் தயாரித்த விழிப்புணர்வு குறும்படத்தினை பார்வையிட்டார்.

# மதுரையில் மெக்டொனால்ட்ஸ் இந்தியா தமிழ்நாட்டின் கலாச்சார தலைநகரில் அறிமுகமாகிறது கோல்டன் ஆர்ச்சஸ் நிறுவனம்

மதுரை: ஏப்.8

தமிழ்நாட்டின் கலாச்சார தலைநகரான மதுரையில் தனது முதல் உணவகத்தைத் தொடங்கியுள்ளது மெக்டொனால்ட்ஸ் இந்தியா (மேற்கு மற்றும் தெற்கு). எதிர்கால அனுபவத்தைத் தரும் (EOTF) இந்தப் புதிய கடை, வியூக முக்கியத்துவம் வாய்ந்த சக்தி வேலம்மாள் சாலையில் அமைந்துள்ளது. மெக்டொனால்ட்ஸ் பிரத்யேக அனுபவத்தை இது மதுரை வாசிகளுக்கு வழங்கும். இந்த உணவகத்துடன், தற்போது தமிழ்நாட்டில் 38 மெக்டொனால்ட்ஸ் இந்தியா உணவகங்கள் உள்ளன. இந்த குறிப்பிடத்தக்க மைல்கல், அதன் விஷன் 2027 உத்தியின் ஒரு பகுதியாக நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டங்களில் முக்கிய தருணத்தைக் குறிக்கிறது.பல நிலைகளைக் கொண்ட இந்தப் புதிய மதுரை உணவகம் சுயமாக ஆர்டர் செய்யும் கியோஸ்க்குகள் (SOK), டிஜிட்டல் மெனு போர்டுகள், டேபிள் சேவை, வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் பல்வேறு ஸ்மார்ட் அம்சங்களைக் கொண்டுள்ளது. மெக்டொனால்ட்ஸ் கிளாசிக் பர்கர்கள், மெக்ஸ்பைசி ஃபிரைடு சிக்கன், மெக்ஸ்பைசி சிக்கன் விங்ஸ் உள்ளிட்ட விரிவான ஃபிரைடு சிக்கன் வகைகள், மெக்டொனால்ட்ஸ் குளிர்பானங்களுடன் கூடிய




விரிவான மெனுவை இந்த உணவகம் வழங்குகிறது. இந்த வகைகளைத் தாண்டி, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நேரத்துக்கான கொரிய உணவு வகைகள், ஃப்ரைஸ், டெசர்ட்ஸ் போன்ற கிளாசிக் விருப்ப உணவுகளையும் வாடிக்கையாளர்கள் சுவைக்க முடியும். மெக்டொனால்ட்ஸ் இந்தியாவின் (W&S) நிர்வாக இயக்குநர் சௌரப் கல்ரா கூறுகையில், "மெக்டொனால்ட்ஸ் அனுபவத்தை மதுரைக்கு கொண்டுவருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் கடைகளை தென்னிந்தியா முழுவதும் விரிவுபடுத்தி வரும் நிலையில், இந்த அறிமுகம் எங்கள் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கிறது. மெக்டொனால்ட்ஸ் தரும் மகிழ்ச்சி, வசதிகளை மேலும் மேலும் சமூகங்களுக்கு கொண்டுசெல்லும் எங்கள் உத்தியில் கவனம் செலுத்துகிறோம். பல தசாப்தங்களாக மெக்டொனால்ட்ஸ் நிறு வனத்தை உலகளவில் வரையறுத்துள்ள நிலையான தரம் மற்றும் சேவையை நண்பர்கள் குடும்பங்கள் ஒன்றுகூடவும், சிறப்பு தருணங்களைக் கொண்டாடவும் அனுபவிக்க வும்கூடிய இடங்களை மேலும் மேலும் உருவாக்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். உங்களுக்குப் பிடித்த மெக்டொனால்ட்ஸ் இப்போது மிக அருகில் வந்துவிட்டது. உண்மையான மெக்டொனால்ட்ஸ் அனுபவத்தை மதுரை மக்களுக்கு மேலும் நெருக்க மாகக் கொண்டுவருகிறது" என்றார்.

எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் வெஸ்ட்லைஃப் ஃபுட்வேர்ல்ட் 2027ஆம் ஆண்டுக்குள் 580 முதல் 630 உணவகங்களை திறக்க இலக்கு வைத்துள்ளது.

2024-25ஆம் நிதியாண்டில், தென்னிந்தியாவில் 27 உணவகங்களைத் திறப்பதன் மூலம் தன் நிலையை மெக்டொனால்ட்ஸ் இந்தியா வலுப்படுத்தியது, இதில் தமிழ்நாட்டில் எட்டு உணவகங்களும் அடங்கும். அனைவருக்கும் சுவையான உணவு நல்ல தருணங்களை எளிதாகத் தருவதற்கான தன் நோக்கத்தில் மெக் டொனால்ட்ஸ் இந்தியா நிறுவனம் உறுதியாக உள்ளது. அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட மெனு உணவு வகைகளில் செயற்கை வண்ணங்கள், செயற்கை சுவைகள், செயற்கை பதப்படுத்திகள், சிக்கனில் MSG சேர்க்கப்படுவது போன்றவை இல்லை என்பதை உறுதிசெய்யும் வகையில் 'ரியல் ஃபுட் ரியல் குட்'இல் இந்த நிறுவனம் உண்மையிலேயே நம்பிக்கை கொண்டுள்ளது. கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக, உள்ளூரில் சேகரிக்கப்பட்ட புதிய பொருட்களை உலகளவில் புகழ்பெற்ற சப்ளையர்களிடம் பெறுவதில் தொடங்கி, தன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற தரம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்வதற்கும் மெக்டொனால்ட்ஸ் இந்தியா உறுதிபூண்டுள்ளது.

# சென்னை தெற்கு மாவட்டம், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழா

கோவிலம்பாக்கம் ஏப்.8

சென்னை தெற்கு மாவட்டம், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியம், கோவிலம்பாக்கம் போலீஸ் பூத் அருகில் 02.04.25. புதன்கிழமை மாலை 5 மணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா, இசையரங்கம் மற்றும் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம். ஜி. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ்.அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் விழாவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர், மேடவாக்கம் .ப.ரவி, ஒன்றிய பெருந்தலைவர், சங்கீதா பாரதிராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் , ஜெ. இ. பாண்டியன், மற்றும் வரவேற்புரையாக ஒன்றிய குழு துணை தலைவர், பி.பிரசாத், மாவட்ட கவுன்சிலர், என். வேதகிரி, சித்தாலப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ் .ரவி, ஒன்றிய துணைச் செயலாளர், ஜே. டி .மனுநீதி, ஒன்றிய துணைச் செயலாளர், எச்.டி. போஸ், ஒன்றிய துணைச் செயலாளர், சமாதானம் நல்லமுத்து, ஒன்றிய



பொருளாளர், த. டில்லி பாபு, மாவட்ட பிரதிநிதிகள், கே.குமார், ஆர்.சொக்கலிங்கம், எம். சி., ஜி .எம்.ஏழுமலை, முன்னாள் மாவட்ட பிரதி நிதி, எ.ரங்கநாதன், கோ. ஒன்றிய கவுன்சிலர், எஸ் .பன்னீர்செல்வம், முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர், எம். பி. மூர்த்தி மற்றும் கோவிலம்பாக்கம் ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள், வார்டு உறுப்பினர்கள் இ. ஜெகநாதன், இ. முருகன், எஸ். கே .சீனிவாசன் ,இ.முத்து, இ. மணிகண்டன், டி. மாதவன், சுஜித்தாசத்யா, சுமதிகுமார், மஞ்சுளா ராஜேஷ். தொடர்ந்து இசையரங்கம் "முத்தமிழ் அறிஞரின் புதல்வர் இந்தியா போற்றும் முதல்வர்" திரை இசை பாடகர்கள் இசையருவி எஸ். ஏ. ராஜ்குமார், கலை மாமணி, மாலதி, கலைமாமணி சின்னப்பொண்ணு, அந்தோணிதாஸ், முகேஷ், செந்தில்தாஸ், நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றியவர்கள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர், பி கே சேகர்பாபு, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், தமிழச்சி தங்கபாண்டியன், மதுரவாயில் சட்டமன்ற உறுப்பினர், காரப்பாக்கம். க கணபதி, விருகை சட்டமன்ற உறுப்பினர், ஏ.வி.எம்.பிரபாகரராஜா, சென்னை மாநகராட்சி துணை மேயர், மு. மகேஷ் குமார், சோழிங்கநல்லூர் தொகுதி பொறுப்பாளர், நா.சந்திரபாபு, நன்றி உரையாக 4 வது வார்டு உறுப்பினர், கே.வி.விஜயகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் , பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# பழனி உழவர் சந்தை அருகே கஞ்சா விற்பனை செய்த 3 இளைஞர்கள் கைது



பழனி ஏப்.8

திண்டுக்கல் மாவட்டம் பழனி அதன் சுற்றுவட்டாரத்தில் கஞ்சா விற்பனை செய்யும் நபர்களை பழனி காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் அதிரடி உத்தரவின் பேரில் ரோந்து பணி அதிகரித்து வந்த நிலையில். காவல் ஆய்வாளர் மணிமாறன் மற்றும் காவல் சார்பு ஆய்வாளர் விஜய் காவலர்கள் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுத.உழவர் சந்தை அருகே சந்தேகத்தின் அடிப்படையில் நின்று கொண்டிருந்த மணிகண்டன் வயது21 கணபதி நகர். மாயவன் வயது30ஜவகர் நகர். இளவேனில் வயது21 புதுநகர். ஆகிய மூன்று நபர்களை விசாரித்த பொழுது முன்னுக்குப் பின்னும் முரணாக பேசிய காரணத்தால் சந்தேகத்தின் பேரில் அவர்களை விசாரித்த பொழுது அவர்களிடமிருந்து 200 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

பின்பு காவல் நிலையம் அழைத்து வழக்கு பதிவு நீதிமன்ற காவலில் பின்பு அடைக்கப்பட்டனர்

# பல்லாவரத்தில் இந்திய கிறிஸ்தவ மிஷன் ஐ.சி.எம் ஜெபவீடு சார்பில் மாபெரும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா

பல்லாவரம் ஏப்..8

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட ஜமீன் பல்லாவரம் சக்தி நகர் பகுதியில் அமைந்துள்ள இந்தியா கிறிஸ்தவ மிஷன் என்கின்ற ஐ.சி.எம் ஜெப வீடு சார்பில் அப்போஸ்தலர் டி.எஸ்.ஜெயா தங்கராஜ் அவர்களின் தலைமையில் பாஸ்டர் டி.ஜெயராஜ் ஏற்பாட்டில் பாஸ்டர் கிரேஸ் ஜெயராஜ் அவர்கள் முன்னிலையில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி 14வது வட்டச் கழக செயலாளர் ராஜ்குமார் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் தர்பூசணி உள்ளிட்ட பொருள்களை வழங்கினார் இதில் பல்லாவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் முரசொலி ராஜன் மற்றும் ஐ.சி.எம்



சபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இறுதியில் வாகன ஓட்டிகளுக்கு நீர்மோர் தர்பூசணி உள்ளிட்ட பொதுமக்களுக்கு வழங்கிய வரவேற்பு ஏற்படுத்தினார்கள்.

# பழனியருகே வக்ஃபு வாரியம் சட்ட திருத்த மசோதாவிற்கு வரவேற்பு தெரிவித்து கிராம மக்கள் பட்டாசு வெடித்து மகிழ்ச்சி

பழனி ஏப்.8

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ளது பாலசமுத்திரம் பேரூராட்சி. 15வார்டுகள் கொண்ட பேரூராட்சியில் வசிக்கும் பொதுமக்கள் சிலர் கடந்தசில ஆண்டுகளுக்கு முன்பு தங்களது சொத்துக்களை விற்பனை செய்ய முயன்று பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்றபோது அந்த சொத்துக்களை விற்பனை செய்யமுடியாது என தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து விசாரித்தபோது பால் சமுத்திரம் கிராமத்தில் உள்ள 96ஏக்கர் பரப்பளவுள்ள 53/1ணீ மற்றும் 1தீ எண்கொண்ட நிலங்கள் அனைத்தும் வக்ஃபு வாரியத்திற்கு சொந்தம் என்றும், எனவே அந்த நிலங்கள் மற்றும் சொத்துக்களை வாங்கவோ, விற்கவோ முடியாது என்று பத்திரப்பதிவுத்துறை



சார்பில் அறிவிக்கப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகி உள்ளனர். இந்நிலையில் நாடாளுமன்றத்தில் வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு, மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து தங்களது கிராமமே வக்ஃப் வாரியத்திற்கு சொந்தம் எனக்கூறி விற்க முடியாமல் இருந்த நிலைமாறும் என்பதால் பாலசமுத்திரம் பகுதி கிராம மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதை எடுத்து பாலசமுத்திரம் கிராமத்தில் பாஜக சார்பில் பட்டாசு வெடித்து இனிப்பு கொடுத்து பொதுமக்களுடன் இணைந்து கொண்டாடினர்.

# புதிய தமிழகம் கட்சியின் தேனி மாவட்ட செயலாளராக மீண்டும் சிவக்குமார் நியமனம்



தேனி ஏப்.8

தேனி மாவட்டம் புதிய தமிழகம் கட்சியின் மாவட்ட செயலாளராக இருந்துவருபவர் சிவக்குமார்.புதிய தமிழகம் கட்சியின் நிறுவன தலைவர் மருத்துவர் கிருஷ்ணசாமி தேனி மாவட்ட செயலாளராக மீண்டும் சிவக்குமாரை நியமனம் செய்துள்ளார் . மீண்டும் பொறுப்பு பெற்றமைக்காக புதிய தமிழகம் கட்சியின் நிறுவன தலைவருக்கு நன்றி தெரிவிப்பதோடு,கட்சியினர் மற்றும் அனைத்து தரப்பின மக்களோடும் மருத்துவரின் நம்பிக்கையை நிறைவேற்றுவேன் என தெரிவித்தார். மேலும் புதிய தமிழகம் கட்சியின் நிறுவன தலைவர் கிருஷ்ணசாமியின் ஆணைக்கிணங்க தேனி மாவட்ட ஒன்றிய ,நகர, பேரூர் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்ட நியமன கடிதத்தை நிர்வாகிகளுக்கு வழங்கினார் .மீண்டும் மாவட்ட செயலாளர் பொறுப்பேற்ற சிவக்குமாருக்கு புதிய தமிழகம் கட்சியினர் மற்றும் பல்வேறு தரப்பினர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## காளையார்கோவில் வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம்



சிவகங்கை, ஏப்.8

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் அரசாணை (நிலை) எண்:22 நாள்: 29.01.2024ன் படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, வருகின்ற 16.04.2025 அன்று காளையார்கோவில் வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் நடைபெற உள்ளது.

மேலும், அன்றைய தினம் பிற்பகல் 04.00 மணி முதல் 06.00 மணி வரை பொதுமக்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் காளையார்கோவில் வட்டம், பரமக்குடி மெயின் ரோடு, வெள்ளையம்பட்டி, பாஸ்டின் நகரில் அமைந்துள்ள A.S.கார்டன் மஹாலில் நடைபெற உள்ளது. மேற்படி கலந்தாய்வு கூட்டத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## கல்லல் முருகப்பா பள்ளி ஆசிரியருக்கு சிறந்த கல்வியாளர் விருது




சிவகங்கை ஏப்.8

சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் பிரபுவுக்கு " சிறந்த கல்வியாளர் விருது" வழங்கப்பட்டது.

ஆசிரியர் பிரபு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக நடைபெற்ற குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் 41 ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்து மாவட்ட, மண்டல அளவில் தேர்வாகி மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க வைத்து 82 மாணவ மாணவிகளை "குழந்தை விஞ்ஞானிகளாக" உருவாக்க காரணமாக இருந்ததார். மேலும், பல்வேறு அறிவியல் கண்காட்சி நிகழ்ச்சிகளில் தன் பள்ளியிலிருந்து 40 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளை பங்கேற்க வைத்தார்.

பள்ளிக்கல்வித்துறை சார்பாக தமிழ்நாடு முழுவதும் இந்த கல்வியாண்டில் நடத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான அறிவியல் கண்காட்சி போட்டியில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் இவர் பங்கு பெற்றார்.

சிவகங்கை புத்தகத் திருவிழாவில் தன்னார்வத்துடன் பணியாற்றுவது, ரத்ததான முகாம் நடத்துவது, ரத்த தானம் செய்வது, மரக்கன்றுகள் நடுவது உள்ளிட்ட இவரது சமூகப் பணிகளையும், எழுத்தாளராக பரிணமிக்கும் இவர் கடந்த ஒன்றரை வருட காலத்தில் 7 நூல்களை எழுதி சாதனை படைத்துள்ளார். கிராமப்புற மாணவ மாணவிகளையும் விஞ்ஞானிகளாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் ஆசிரியர்களின் துணையுடன் தனது பள்ளியிலிருந்து 63 மாணவ மாணவிகளை கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கும் இவர் அழைத்துச் சென்று வந்தது குறிப்பிடத்தக்கது. உலகத் திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக மாணவர்களை திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிக்கு ஆசிரியர்களின் பங்களிப்புடன் தயார்படுத்தி வருகிறார்.

இத்தகைய சாதனைகளை செய்த ஆசிரியர் பிரபுவுக்கு கோயம்புத்தூரில் ஏஜேகே கல்விக் கூழுமத்தின் ஓர் அங்கமாக செயல்பபடடு வரும் ஏஜேகே கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக விஞ்ஞானி முனைவர் ஆர்.எஸ். லால் மோகன் நினைவு " சிறந்த கல்வியாளர் விருது " ஏஜேகே கல்விக் குழுமம் சேர்மன் அஜீத் குமார், காவல்துறை அதிகாரி( ஓய்வு ) முனைவர் சைலேந்திரபாபு, முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன், எழுத்தாளர் உதயக்குமார், நாகர் கோவில் ஜெயசேகரன் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் ஜோசப் ரஞ்சித் ஜெயசேகரன், ஏஜேகே கல்விக் குழுமம் இயக்குநர் பிந்து அஜீத், ஏஜேகே கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ராஜு, மொழியியல் துறைத் தலைவர் முனைவர் ஜாஸ்மின் பிரியா ஏஜேகே நர்சிங் கல்லூரி முதல்வர் முனைவர் பிருந்தா ஆகியோர் முன்னிலையில் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

## மானாமதுரை ரயில் நிலையத்தில் வைக்கப்பட்ட நாளிலிருந்து காட்சிப் பொருளாக இருக்கும் விற்பனை அரங்க பெட்டி




மானாமதுரை ஏப்.8

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில்வே சந்திப்பு நிலையத்தில் மத்திய அரசின் 'ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு' திட்டத்தின்கீழ், தெற்கு ரயில்வேயில் நெசவாளர்கள், கைவினைஞர்களின் படைப்புகள், உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளூர் வணிகத்தை ஊக்கப்படுத்தவும், கைவினை றஞர்கள், நெசவாளர்களின் படைப்புகளை பிரபலப்படுத்தும் வகையிலும் 'ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு' திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின்கீழ், தெற்கு ரயில்வேயில் பல்வேறு ரயில் நிலையங்களில் அந்தப் பகுதிக்கு ஏற்ற பொருட்கள் செய்துவிற்பனை செய்வதற்காக விற்பனை அரங்கு பெட்டி வைக்கப்பட்டு அந்த பொருட்களை விற்பனை செய்து வருவது வழக்கம் ஆனால் மானாமதுரை பொருத்தவரை மண்பாண்டம் என்றால் மானாமதுரை மட்டும்தான் அந்த மண்பாண்டம் ஏற்ற பொருட்களை விற்பதற்கு ஒருநிலையும் ஒரு பொருள் என்பதின் கீழ் அந்த விற்பனை அரங்க பெட்டி ஒரு ஆண்டுக்கு முன்பு வைக்கப்பட்டது வைத்த நாளில் இருந்தே இந்த விற்பனை அரங்க பெட்டி அப்படியே இடத்தை அடைத்து பயணிகள் யாரும் உட்கார முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர் அந்த விற்பனை அரங்கப்பட்டியில் மானாமதுரை மண்பாண்ட பொருட்களை விற்பனை செய்ய யாரும் முன் வராததால் விற்பனை பெட்டி காஞ்சி பொருளாகவே ஓராண்டுக்கு மேலாக ரயில் நிலையத்தின் ஒரு பகுதியின் இடத்தை அடைத்து வைத்திருப்பதால் பயணிகளுக்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது ஒரு நிலையம் ஒரு பொருள் மண்பாண்ட பொருளுக்கு பதிலாக வேறு பொருட்களை விற்பனை செய்ய ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லை என்றால் விற்பனை அரங்க பெட்டியை அகற்றி விட வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது..



மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.29 வைகை ஆறு கல்பாலம் பகுதியில் தேங்கியிருந்த மழைநீரை அகற்றும் பணியினை மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் சித்ரா விஜயன், ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அருகில் மண்டலத் தலைவர் முகேஷ்சர்மா மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் மாற்றுத்திறனாளிக்கு நவீன செயற்கை கால் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா வழங்கினார்.



சிவகங்கை நகராட்சி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வந்து சில மாதங்களிலேயே கழிவுநீர் கால்வாய் உடைந்து தண்ணீர் வெளியேறுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது மேலும் நோய் தொற்று அபாயம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. கழிவு நீர் தேங்காதவாறு தூய்மைப் படுத்த வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்..





தேனி மாவட்டம் போடி மெட்டு மலை உச்சியில் அமைந்திருக்கும் அருள்மிகு தர்மசாஸ்தா கோவில் அருள்மிகு ஸ்ரீ மகா காளீஸ்வரி கோயில் ஸ்ரீ கருப்பசாமி கோவில் ஸ்ரீ பாலமுருகன் கோவில் ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில் ஆகிய கோவில்களின் உற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக பொங்கல் வைத்தும் பால்குடம் எடுத்தும் அக்னி சட்டி எடுத்தும் குத்துவிளக்கு பூஜை நடைபெற்றது இத்துடன் கலை நிகழ்ச்சிகளும் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று அனைவருக்கும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்களும் விழா கமிட்டியாளர்களும் கலந்து கொண்டனர்..



நாகர்கோவில் மாநகராட்சி 30 வது வார்டுக்குட்பட்ட கோபாலபிள்ளை மருத்துவமனை அருகிலிருந்து ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிலிருந்து மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேயர் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் ரெ.மகேஷ் துவங்கி வைத்து மேலும் நடைபாதை அமைப்பதற்காகன வழிமுறைகளை மாநகராட்சி அதிகாரிகளிடம் கூறினார். மண்டலத்தலைவர்கள் செல்வக்குமார், ஜவஹர்,மாமன்ற உறுப்பினர் சந்தியா,மாநகர செயலாளர் ஆனந்த், பகுதி செயலாளர் ஷேக் மீரான்,செயற்குழு சதாசிவம், வட்டச்செயலாளர் சுரேஷ் கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பெரியகுளம் நகர அஇஅதிமுக சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்







பெரியகுளம் ஏப்.8

தேனி மாவட்டம் பெரியகுளம் நகர அஇஅதிமுக சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் அரண்மனை தெருவில் உள்ள தனியார் மண்டபத்தில் பெரியகுளம் நகர் கழக செயலாளர் பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. பெரியகுளம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜகுரு,மாவட்ட கழக இணைச் செயலாளர் முத்துலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளரும்,தேனி கிழக்கு மாவட்ட தேர்தல் பொறுப்பாளருமான ரதிமீனா சேகர்.

தேனி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முறுக்கோடை இராமர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசும்போது "திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியினுடைய அவலங்களான கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகிய கொடூர செயல்களை தினமும் நீங்க தொலைக்காட்சியில் பாக்குறீங்க,அலைபேசியில் பாக்குறீங்க அதேபோல தினசரி நாளிதழில் பாக்குறீங்க எல்லாமே பொதுமக்களுக்கு எதிர்ப்பான ஆட்சியாக தான் நடந்து வருகிறது.இந்த சட்ட விரோதமான ஆட்சியை அகற்றி எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சியை மீண்டும் 2026ல் ஏற்படுத்தி எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சராக வெற்றி பெற செய்ய நாமெல்லாம் ஒன்றிணைந்து பாகுபாடு இல்லாமல் பாடுபட வேண்டும். அதேபோல் பூத் கமிட்டியில் ஒரு பூத்துக்கு ஒன்பது பேர் அடங்கும் அதில் மூன்று பெண்கள் பொறுப்பாளர்களாக இருப்பார்கள்.இந்த பூத்து கமிட்டியில் சாதி மதம் பாராமல் அனைவருக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தரவேண்டும்.வருகிற 2026 ஆம் ஆண்டு பெரியகுளம் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிகளை கைப்பற்றி மீண்டும் அதிமுகவின் எஃகு கோட்டையாக மாற்றி நல்லாட்சியை ஏற்படுத்துவோம்" என்று பேசினர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏ பெரியவீரன், அம்மா பேரவை இணை செயலாளர் ஜெயக்குமார், மருத்துவர் அணி இணைச் செயலாளர் அனுமந்தன், தகவல் தொழில் நுட்ப மண்டல செயலாளர் பாலசந்தர், பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி,மாவட்ட இளைஞர் மற்றும் பாசறை செயலாளர் கழகத்தின் போர்வாள் அப்பாஸ் மைதீன்,மாவட்ட இலக்கிய அணி செயலாளர் தவமணி,மாவட்ட துணைச் செயலாளர் அங்குலட்சுமி சௌந்தர்,மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் ராம தண்டபாணி,மாவட்ட பிரதிநிதிகள் சுரேஷ்,விஜய் ஆனந்த்,மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் பாப்பா இளமுருகன்,பூங்கொடி,பஞ்சவர்ணம், வடுகப்பட்டி பேரூர் கழக செயலாளர் பாலமுருகன்,தாமரைக்குளம் பேரூர் கழக செயலாளர் மனோகரன், பெரியகுளம் நகர அவைத்தலைவர் கோம்பையன், நகர் கழக துணைச் செயலாளர் வெங்கடேசன்,பெரியகுளம் நகர எம் ஜி ஆர் மன்ற செயலாளர் கணேசன் உள்ளிட்ட மாநில மாவட்ட,ஒன்றிய நகர,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பல கலந்து கொண்டனர்.

## வித்யா கிரி கலை அறிவியல் கல்லூரியின் இரண்டாம் பட்டமளிப்பு விழா




காரைக்குடி ஏப்.8

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் புதுவயல் வித்யாகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இரண்டாம் பட்டமளிப்பு விழா அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு அழகப்பா பல்கலை கழக துணைவேந்தர் ரவி மற்றும் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தினர். தவத்திரு பொன்னம்பல அடிகளார் தனது உரையில் கல்வி தான் மனிதனுக்கு உயர்வை தரும். மாணவர்கள் கல்வியை கசடற கற்று, கற்ற அறிவினை பயன்படுத்தி வாழ்வில் உயரவேண்டும் என்றும் தாமஸ் ஆல்வா எடிஷன் மற்றும் கணியன் பூங்குன்றனார் போல் அறிவாகவும் ஆற்றலுடனும் மாணவர்கள் செயல் பட வேண்டும் என்று கூறினார். இந்த விழாவில் சுமார் 420 பேர் பல்வேறு பாட பிரிவுகளில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்கள் பெற்றனர். இதில் 5 பேர் பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்றவர்கள் 28 பேர் கல்லூரி அளவில் ரேங்க் பெற்றவர்கள். பட்டங்கள் பெற்றவுடன் மாணவர்கள் பட்டமளிப்பு விழா உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். முன்னதாக வித்யாகிரி கல்வி நிறுவனங்களின் முதன்மை நிர்வாக அதிகாரி ஐஸ்வர்யா சரணசுந்தர் அனைவரையும் வரவேற்றார். வித்யாகிரி கல்வி நிறுவனங்களின் தாளாளர் மற்றும் கல்லூரி முதல்வர் டாக்டர் சுவாமிநாதன் ஆண்டறிக்கை வாசித்தார். வித்யாகிரி கல்வி நிறுவனங்களின் தலைவர் கிருஷ்ணன் மற்றும் பொருளாளர் ஹாஜி முகம்மது மீரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது. இதில் கல்லூரி பேராசிரியர்கள் மாணவர்கள் காரைக்குடி வித்யாகிரி பள்ளி முதல்வர் ஹேமமாலினி சுவாமிநாதன் , புதுவயல் பள்ளி முதல்வர் குமார் மற்றும் காரைக்குடி நகரின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161